தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
**Tamilar Remembrance Foundation - Swiss**
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.com trfswiss@gmail.com

**13 வயதுப்பிரிவு**
(01.01.2003 – 31.12.2004 வரையில் பிறந்தோர்)

## மகுடம் சூடும் மாவீரர் கனவு

அறத்தின் வழி நின்று தம் இனத்தின் துயர் துடைக்கத் தமிழீழ மண்சுமந்த மேனியராய் நிமிர்ந்தவர்கள். தம்மினம் வதைபடுதல் கண்டும் தம் வாழ்வே பெரிதென்று வாழ்ந்தவர்கள் மத்தியில், "தமிழீழத்தாயகம் ஒன்றே எங்கள் இலக்கு" என்று உரக்கச் சொல்லி, இறக்கும் வரை உறுதியாய் நின்றவர்கள். அன்பும் பண்பும் அவர்களின் அடையாளங்கள். வீரமும் வேகமும் அவர்களின் சொத்துகள். அன்னை தேசமும் அன்புத் தலைவரும் அவர்களின் சொந்தங்கள். ஆம்! யார் இவர்கள்?

தமிழும் தமிழரும் அரியணையேறும் தமிழீழதேசத்தைப் பிரசவிக்க, புலிப்படை திரட்டி, பகைவிரட்டி, தலைநிமிர்த்தி நின்ற எங்கள் தேசியத்தலைவர் மாமாவின் விழியசைவின் வினையறிந்த வித்தகர்கள். தமிழீழ தேசத்தைச் செப்பனிட்டுச் செதுக்கிய சிற்பிகள். தனித்துவமாய் வாழ்ந்த தமிழினத்தின் இருப்பிற்காக நெருப்பாகிச் சென்றவர்கள். தாம் சிந்திய குருதியால் சொந்தங்களைக் காத்தவர்கள். மண்ணிலும் விண்ணிலும் கடலிலும் வீரத்தின் தீரங்களாய் தியாகத்தின் உச்சங்களாய் வெடித்துச் சிதறியவர்கள். மண்மீட்புப் போரிலே தம் இன்னுயிர்களை ஈந்தவர்கள். எங்கள் காவல் தெய்வங்களாகி கல்லறைக்குள் வாழ்பவர்கள். என்றென்றும் எங்களின் நினைவோடு ஒன்றிய மாவீரர்கள். அவர்கள் இறவா வரம் பெற்ற சரித்திரப் புதல்வர்கள்.

எங்கள் தேசத்தின் விடுதலை! எமது மக்களின் சுதந்திர வாழ்வு! இதுவே மாவீரர்களின் கனவு. அதனை நனவாக்குவதே எங்கள் அனைவரின் கடமை. உருண்டு ஓடும் காலச்சக்கரத்தில் அவர்களின் கனவு காணாமற்போய்விடும் நிலை உருவாக நாம் விடலாமா? எங்கள் தேசப்புதல்வர்களை விதைத்த நிலங்களையெல்லாம் விழுங்கிக் கொண்டிருக்கிறது சிங்களத்தின் வெள்ளரசு மரங்கள். மண்ணுக்குள் உறங்கிக் கொண்டிருப்பவர்கள் புழுங்கித் தவிக்கிறார்கள். நிலம் பிளந்து வெளிக்கிளம்பத் துடிக்கிறார்கள்.

திட்டமிட்ட வகையில் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது தமிழ் இன அழிப்பின் மிச்சங்கள். அது நிலத்தைக் கடந்து புலத்திற்கும் நீண்டிருக்கிறது. இதனைச் சரியாகப் புரிந்து கொண்டு நாம் விழித்துக்கொள்ள வேண்டும். எம்மிடம் பறிக்கப்பட்டது, நிமிர்ந்து நின்ற தாய்நாடு மட்டுமல்ல, எமது மொழியும் கலையும் பண்பாடும்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அன்று, கையசைத்து வழியனுப்பிய போது விழிசுரந்த கண்ணீரை மடல்களுக்குள் அடக்கி, அடுத்த விடுமுறைக்கு வருவாரெனக் காத்திருந்தவேளை, வித்துடலாய் வந்தவரை கல்லறைக்குள் விதைத்து விட்டு கார்த்திகைக்காய் காத்திருந்த பெற்றவர்களின் இன்றைய நிலை என்ன? சிந்தித்துப்பாருங்கள் உறவுகளே! விடுதலை நோக்கிய எமக்கான பணிகள் நிறைந்து கிடக்கின்றன. ஆதலால் ஒன்றுபட்டு நிற்போம். வலியோடும் வடுவோடும் வாழ்கின்ற எங்கள் உறவுகளை கைகொடுத்து உயர்த்துவோம். களங்களையே வாழ்வாக்கி இளமைக் காலத்தைத் தமிழீழ விடுதலைக்காய் ஈந்த மாதவத்தோரின் மனக்கிடக்கையை எமக்குள் நிறைப்போம்.

உன்னதமானது உயிர்த்தியாகம். அத்தகைய உயரிய தியாகத்தை உரிமைக்காகச் செய்தவர்கள் எங்கள் மாவீரர்கள் என்பதை உள்ளத்தில் பதிப்போம். அவர்கள் வல்லமை தந்து, எமக்கு வழிகாட்டி நிற்பார்கள். அச்சம் தவிர்ப்போம்! உச்சம் தொடுவோம்! மகுடம் சூடும் மாவீரர் கனவு.

நன்றி
வணக்கம்.